தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 24 டிசம்பர் 2023 கனி 1



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16




MONTHLY
THE WORD OF CHRIST

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 48

தலைப்பு : தேறினவன் - Perfected

வேத வாசிப்பு : யோபு 36:1-5

1. தாவீது சுரமண்டலம் வாசிப்பதில் - 1சாமு.16:18
2. எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாணத்தில் - எஸ்றா 7:6
3. எலிகூ அறிவில் தேறியிருந்தான் - யோபு 36:4


மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

G-Pay & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Sunday, Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ





## THE WORD OF CHRIST

Monthly Magazine

Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 24 டிசம்பர் – 2023 கனி – 1


ஆசிரியருரை

## சத்தியத்தின் பயன்கள்

The Uses of the Truth



**ச**த்தியம் சத்தியம் என்று எங்கும் எப்பொழுதும் பேசப்படுகிறது. அந்த சத்தியம் யார்? சத்தியத்தின் பயன்கள் என்ன? என்பதைக்குறித்து இச்செய்திவேளையில் தியானிக்கவுள்ளோம். ஆண்டவராகிய இயேசு சத்தியத்தின் வாசலாகவும் அவரே சத்தியபரராகவும் இருக்கிறார். அவர் சொல்லும்போது; "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் எனறார்" (யோவா.10:9). இவர் வழியாய் ஒருவன் சொல்லாவிட்டால் அவன் இரட்சிக்கப்படமுடியாது. அதாவது அவனுடைய ஆத்துமா காப்பாற்றபட முடியாது என்று சொல்லுகிறார். அவருடைய வழி சத்தியமாகவும் அது ஜீவனாகவும் இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலரே. அதில் நீங்கள் ஒருவராக இருக்கவேண்டும். அநேகர் கேட்டுக்குப்போகிற வாசல்வழியே போகவிரும்புகின்றனர். அதை அநேகர் தெரிந்துகொள்ளுகின்றனர். ஜீவனுக்குப்போகிற வாசல் வழி நெருக்கமும் இடுக்கமுமாயிருக்கிறது. சத்தியபரராகிய இயேசு நல்லமேய்ப்பராயிருக்கிறார். "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). வேலைக்காரன் ஓநாய் வருகிறது என்றால் ஓடிவிடுவான். ஆனால் நல்லமேய்ப்பராகிய இயேசு ஆடுகளுக்காக தன் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். ஓநாயைக்காட்டிலும் மிகவும் கொடூரமான பிசாசின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக பாவ பலியாக இயேசு தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறோம்.

மேலும் அவர் சொல்லும்போது; "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் **உம்முடைய வசனமே சத்தியம்** என்கிறார்" (யோவா.17:17). ஆம், கர்த்தருடைய வசனம் பரிசுத்தமானது, அது ஒருமனிதனை பரிசுத்தமாக்க வல்லது. ஆகையால் உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் என்கிறார். இன்றைக்கு உலகத்தில் அநேக பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அவருடைய வசனம் அவர்களை சகல அசுத்தத்திலிருந்து விடுவித்திருக்கிறது. அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். பயங்கரமான பாவப்பிடியிலிருந்தவர்களை கர்த்தருடைய வசனம் விடுவித்து நீதிக்கு அடிமைகளாக்கியிருக்கிறது.

**சத்தியம் ஒவ்வொரு மனிதனையும் போஷிக்கிறதாயும் இருக்கிறது.** அவரைப்பின்பற்றின சீஷர்கள் மீன்பிடிக்கும்படியாக சென்று மீன்கள் அகப்படாதபடியால் வருத்தத்துடன் இருந்தார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து வலைகளை படவுக்கு வலதுபுறமாக போடுங்கள் என்றார். அவர்கள் அவருடைய வார்த்தையின்படியே போட்டு திரளான மீன்களைபிடித்து வலையை இழுக்கமாட்டாதிருந்தார்கள். அவர் அவர்களை கரைக்கு அழைத்து, வாருங்கள் போஜனம்பண்ணுங்கள் என்று சொல்லி "அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்" (யோவா.21:13). சத்தியபரராகிய இயேசு அவர்களை நேசித்ததோடல்லாமல், போஷிக்கவும் செய்தார். மேலும் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறவராயும் இருந்தார் எனக்காண்கிறோம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்றார் (யோவா.14:23).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் அவரில் அன்பாயிருக்கிறீர்களா? அவரில் அன்பாயிருந்தால் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுங்கள். அநேகர் அவரை நேசிக்கிறோம், அவருடைய பிள்ளையாக இருக்கிறோம், அவர் வழியே நடக்கிறோம் என்பார்கள். ஆனால் கடுகளவும் வேத வசனத்தின்படி நடக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் கர்த்தர் வாசமாயிரார். நாம் வசனத்தை கைக்கொள்ளும்போது தேவத்துவம் நம்மோடிருக்கும். நாமும் பரிசுத்தமுள்ளவர்களாயிருப்போம்.

**சத்தியம் நமக்கு ஜீவத்தண்ணீரைக்கொடுக்கும்** என பார்க்கிறோம். இயேசு ஒரு முறை சமாரிய பெண்ணிடம் பேசிக்கொண்டிருக்கும்போது; "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்" (யோவா.4;10). தாகமாயிருக் கிறவர்களுக்கு கர்த்தர் ஜீவத்தண்ணீரைக் கொடுக்கக்கூடியவரா யிருக்கிறார். ஒருவன் தாகமாயிருந்தால் அவன் என்னிடத்தில் வந்து பணமும் இன்றி விலையும் இன்றி பாணம்பண்ணக்கடவன் என தீர்க்கதரிசன புத்தகங்களில் வாசிக்கிறபடி கர்த்தர் தம்மிடத்தில் வருவோருக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுக்கிறார் என அறிகிறோம்.

**சத்தியம் சமாதானத்தைக் கொடுக்கும்**. இன்றைக்கு நாட்டில் சமாதானமில்லை, வீட்டில் சமாதானமில்லை எங்கும் சமாதானமில்லை என்று வாழ்ந்துகொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களைப் பார்க்கிறோம். இதற்கு தீர்வு சத்தியத்தினிடத்தில் இருக்கிறது. இயேசு சொல்கிறார்; "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்கிறார் (யோவா.14:27). தம்மைப் பின்பற்றிய சீஷர்களுக்கு இயேசுவானவர் சமாதானத்தை விட்டுச் சென்றார். மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை எனக் காண்கிறோம். அவருக்கு ஒரு இராஜ்யம் இருந்தது. ஆனால் அரண்மனை இல்லை, அவருக்கு அநேக சீஷர்கள் இருந்தார்கள். ஆனால் ஆயுதங்கள் இல்லை. இப்படி உலகப்பிரகாரமான காரியங்கள் அவரிடம் இல்லை. ஆனால் அவர்களுக்கு

நிரந்தரமான சமாதானத்தை வைத்துப்போனார். ஆகையால் இன்று வரை கிறிஸ்தவர்கள் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அநேக குடும்பங்களில் சொத்து இருக்கிறது. ஆனால் சமாதானமில்லை. ஒருவரையொருவர் தாக்கி சண்டையிட்டு ஒன்றுமில்லாமற்போகிறார்கள். ஆனால் சத்தியம் தம்மை நேசிப்பவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறது. இந்த சமாதானத்தை உங்களுடைய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள சத்தியத்தை முதலாவது நேசியுங்கள் அதைப் பற்றிக்கொள்ளுங்கள். இந்த சத்தியம் ஒருவனை பாவத்திலிருந்து விடுதலைசெய்யும். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). தம்மை விசுவாசித்த யூதர்களுக்கு இந்த உபதேசத்தை கொடுத்தார். நீங்கள் இயேசுவை அதாவது சத்தியபரரை விசுவாசிப்பீர்களானால் சத்தியத்தையும் அறிவீர்கள் அந்த சத்தியம் உங்களை விடுதலையாக்கும். சத்தியத்தை ஒருவன் அறிந்துகொள்ளாமல் பாவத்திலிருந்து விடுதலையடைய முடியாது. அநேகர் பொருட்களை கடைகளில் விலைகொடுத்து வாங்கிவிடுவதுபோல சத்தியத்தையும் வாங்க முயற்சிக்கின்றனர், அதுகூடாது. சத்தியத்தை வாங்கு அதை விற்காதே என வேதத்தில் படிக்கிறோம். சத்தியத்தை வாங்கு என்றால் அதற்காக செலவு செய்து அதை அடைந்துகொள் என்பதே பொருள். அது ஒரு இடத்தில் கிடைக்கும் பொருள் அல்ல. அதை புதையல்களைத் தேடுவதுபோல தேடு அப்பொழுது கண்டடைவாய். சத்தியத்தை நீ அடையும்போது அது உன்னை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாக்கும். இது ஒரு கூட்ட ஜனங்களுக்கு மட்டுமல்ல உலகத்தில் உள்ள எல்லோரையும் பாவத்திலிருந்து விடுவிக்கும்படியாக கொடுக்கப்பட்டது. ஆகையால் சத்தியம் பாரபட்சம் அற்றது. சத்தியபரராகிய இயேசு தம்மை நேசிக்கிறவர்களையும், தம்மைத்தோடுகிறவர்களையும், தம்மை நம்புகிறவர்களையும் விடுதலையாக்குவார்.

**சத்தியம் நமக்காக வேண்டுதல் செய்யும்**. அவர் நம்மை பாவத்திலிருந்து காப்பாற்றி விடுவதோடல்லாமல், மேலும் நம்மைப்போல அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்கிறார்" (யோவா.17:20). இந்த சத்தியத்தில் (அவரில்) நிலைத்திருக்கும்போது நிலையாக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். இயேசு சொல்கிறார்; "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்" (யோவா.15:4). சத்தியத்தில் நாம் நிலைத்திருக்கும்போது சத்தியம் நம்மில் இருக்கும். சத்தியத்தை விட்டு நாம் விலகும்போது சத்தியமும் நம்மைவிட்டு விலகும். எப்படி திராட்சச்செடியில் நிலைத்திருக்கிற கொடிகள் கனிகொடுக்கிறதோ, அதைப்போல மெய்யான திராட்சச்செடியாகிய இயேசுவில் நாம் நிலைத்திருக்கும்போது நாம் அவரில் கனிகொடுக்கமுடியும்.


**சத்தியத்தை நேசிக்கிறவர்களுக்கு கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம்** என்னவென்றால்; நித்தியமான பரலோக பிதாவை இந்த சத்தியபரராகிய இயேசுவின் மூலமாக சந்திக்கும் சிலாக்கியத்தை அவர் மூலமாக

பெறுவோம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). தேவனை சந்திக்க பலவிதமான முயற்சிகளை ஜனங்கள் எடுக்கிறார்கள். பலவிதமான தவங்களை மேற்கொள்ளுகிறார்கள். இருந்தாலும் அவர்களால் தேவனை சந்திக்கமுடியவில்லை. ஒரே ஒரு வழியை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த வழி சத்தியத்தின் மூலமாக இருக்கிறது. அந்த சத்தியபரராகிய இயேசுவை அறியாமல் ஒருவன் தேவனை தரிசிக்க முடியாது. அவருடைய சமுகத்திற்கு செல்லவும் முடியாது. ஆகையால் இயேசு சொல்லும்போது, என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். அது யாராக இருந்தாலும், எப்போர்பட்ட பதவியிலிருந்தாலும், அவர்கள் இயேசு பிறந்த யூத கோத்திரத்தில் பிறந்தவர்களாயிருந்தாலும், அவர்கள் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற இயேசுவின் வழியாக செல்லாமல் அவரை, அதாவது பிதாவை சந்திக்கமுடியாது.

மேலும் இந்த சத்தியம் நமக்கு நித்திய வாழ்வை கொடுக்கும் என பார்க்கிறோம். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்" (யோவா.3:36). இந்த உலகத்தில் பிறந்து வாழ்ந்து நித்திய வாழ்வை அதாவது அழியாத வாழ்வை கொடுக்கும் சத்தியபரராகிய இயேசுவை விசுவாசியாமல் ஒருவன் மரிப்பானேயானால், அவன் இந்த உலகத்தில் வாழ்ந்து பயன் ஒன்றுமில்லை என்றே சொல்லவேண்டும். ஒரு மனிதனுக்கு வீடு, வாசல், சொத்து, சுகம் ஒன்றும் இல்லாமற்போனாலும், அவன் இயேசுவை விசுவாசித்து பற்றிக்கொள்ளும் போது நிலையான ஜீவனை பெற்றுக்கொள்ளுகிறான். தேவனுடைய ஆசீர்வாதம் அவனோடே இருக்கும். சத்தியம் நமக்கு அநேக நன்மைகளை கொடுக்கிறது என்று தியானித்தோம். இந்த நன்மைகளை பெற்றுக் கொள்ளாதிருக்கிறவர்களுக்கு சத்தியத்தின் பயன்களை எடுத்துச் சொல்லுங்கள்.

**எவர்கள் இந்த சத்தியத்திற்கு செவிகொடுப்பார்கள்?**

உலகத்திலே பலதரப்பட்ட ஜனங்கள் வாழ்ந்துவருகிறார்கள். இதில் சத்தியத்தை நேசிக்கிற ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அவர்களை நாம் கண்டுகொள்ளவேண்டும். இயேசு பிலாத்துவினிடத்தில் பேசும்போது; "பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). நீங்கள் ஒரு சத்தியவனாக இருந்தால் ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பீர்கள். ஏனென்றால் அவர் சத்தியத்தைக்குறித்து சாட்சிகொடுக்கும்படியாக இந்த உலகத்தில் வந்தார். அவரிடத்தில் ஒரு குற்றத்தையும் ஒருவரும் கண்டுபிடிக்கமுடியவில்லை. பாவத்திற்கு விலகினவராகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் சத்தியபரராகையால் எல்லோரையும் நேசித்தார், போஷித்தார், விடுவித்தார், சுகமாக்கினார், சமாதானத்தை வைத்துப்போனார், தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். நீங்களும் சத்தியபரராகிய இயேசுவை விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## இரட்சிப்பைக் குறித்து ....வேதாகமம் என்ன போதிக்கிறது?
## What Does the Bible Say About... Salvation?

*-J.C.Choate*

(தயவு செய்து வேதவாக்கியங்களை வாசித்து இந்த வினாவை ஆழ்ந்து யோசித்து விடையை சரிபாருங்கள்)

**1. சுவிசேஷம் என்றால் என்ன?**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளிலே உயிர்த்தெழுந்து..." (1கொரி.15:1-4).

☐ இரட்சிப்பு

☐ கிறிஸ்துவில் நம்பிக்கை

☐ கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவற்றின் நற்செய்தி.

**2. ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?**

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16).

☐ விசுவாசத்தை மட்டும் கொண்டிரு.

☐ மன்னிப்பிற்காக ஜெபியுங்கள்.

☐ கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் .

**3. விசுவாசம் எப்படி வருகிறது?**

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).

☐ ஒரு வெளிப்பாட்டை காண்பது மூலம்.

☐ தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுவதன் மூலம்.

☐ கர்த்தர் தனிப்பட்ட விதத்தில் ஒருவனுடன் பேசுவதின் விளைவுபடி.

**4. மனந்திரும்புதல் என்றால் என்ன?**

ஒரு தகப்பன் தன் மகனை தன்னுடைய தோட்டத்திற்குச் சென்று வேலை பார்க்கும்படி கேட்டுக்கொண்டான். "அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மத்.21:29). மனந்திரும்புதல், என்பது ஒரு மனம் மாற்றம், மனந்திரும்புகின்ற செயல் மேலும் வேறொரு வழியில் சென்றுகொண்டிருத்தல் ஆகும். பவுல் இதை இவ்வழியாக விளக்குகிறார்: "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத்

தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" (எபே.4:28).

☐ ஒருவனுடைய பாவங்களை அறிக்கையிடுதல்.

☐ மன்னிப்பிற்காக கர்த்தரை நோக்கி கேட்பது.

☐ ஒருவனுடைய பாவங்களிலிருந்து திரும்புதல்.

**5. ஒருவன் செய்ய வேண்டிய அறிக்கை என்ன?**

எத்தியோப்பியாவிலிருந்து ஒரு மனிதன் வந்தபோது அவன் முழு மனதுடன் விசுவாசித்தால் என்று அவன் வினவப்பட்டபோது அவன் ஞானஸ்நானம் பெற்று கொள்ளும்படி விரும்பினான், "அதற்கு பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி" (அப்.8:37). பிறகு பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அறிக்கை மனிதருக்கு முன்பாக வாயினால் உருவாக்கப்படவேண்டியிருக்கிறது. (ரோம.10:10; மத்.10:32).

☐ அது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது.

☐ அது ஏற்கனவே தன்பிழைக்காக மனந்திரும்பின விசுவாசி இரட்சிக்கப்பட்டிருக்கிறான்.

☐ ஒருவனுடைய பாவங்களின் அறிக்கை.

**6. ஞானஸ்நானம் அவசியமானதா?**

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1பேது.3:21). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோம.6:3). "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரி.12:13). இங்கு சரீரமே சபையாக இருக்கிறது (கொலோ.1:18).

☐ ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின் அடையாளம்.

☐ ஞானஸ்நானம் தேவையில்லை.

☐ ஒருவன் முழு இருதயத்துடன் கிறிஸ்துவை விசுவாசித்தால், அவன் கிறிஸ்துவுடனும் அவருடைய சரீரமாகிய சபையோடு இணைக்கப்படும்படிக்கு, அவன் ஞானஸ்நானம் பெறும்படி தயாராயிருக்கிறான்.

**7. ஞானஸ்நானம் என்றால் என்ன?**

"ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய

செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ.2:12). "இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்" (அப்.8:38).

☐ தண்ணீரில் அடக்கம்.

☐ தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல்.

☐ ஒரு அடையாளமான சைகை.

**8. வேதாகமத்தில் 'ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர், எப்போதும் இரட்சிக்கப்பட்டுள்ளார்" என்ற கோட்பாடு போதிக்கப்பட்டுள்ளதா?**

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:12). "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது" (2பேது.2:20-22).

☐ ஆம்.

☐ இல்லை.

☐ பதில் தெளிவாக இல்லை .

**9. இரட்சிக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள்?**

"...இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப்.2:47).

☐ இயேசு இரட்சிப்பதற்கென மரித்ததால் இரட்சிக்கப்படுகிற அனைவரும் சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

☐ ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

☐ எல்லா குழுக்களிலும் இரட்சிக்கப்பட்ட மக்கள் உள்ளனர் .

**10. கிறிஸ்துவின் சபை இன்று இருக்கின்றதா?**

"... பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்" (தானி.2:44,45; அப்.2; மத்.16:17,18).

☐ இல்லை.

☐ ஆம்.

☐ ஞானஸ்நானம் பெற்ற சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர்களாகயிருக்கிறார்கள்.

பெண்கள் பகுதி

# தேவன் ஒருவர் இருக்கிறாரா?

# Is There A God?

-Betty



நான் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். "நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகுதியானகேட்டிலும் அதிகம் "ஒன்றும் மிஞ்சவில்லை". இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை". உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில் தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமை பயத்தினை துளைத்துவிடுகிறது. "ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால், மனிதனது 'முன்னேற்றம்' மற்றும் 'உண்மையற்றசெயல்' போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப்பண்ணியிருக்காதா?

ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10).

இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம் அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பாராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான் ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையான அவனுடைய கிரியைகளை எங்கும் எப்பொழுதும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம் சொல்லுகிறார் (1பேது.5:8).

தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் - தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.

சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப் பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவனாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

"நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே"

நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ……நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை……." - ஏசா.43:11-13 என்கிறார்.

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

**Bible Characters**

31



## பரிசுத்த வேதாகமத்தில் சவுல்
## Saul In The Holy Bible

1. பென்யமீன் கோத்திரத்தானகிய கீசின் மகன் - 1சாமு.9:1,2
2. கழுதையை தேடிப்போன சவுலை, சாமுவேல் சீட்டுப்போட்டு ராஜாவாக்கினான் - 1சாமு.10:24
3. சவுலை ராஜாவாக்கினது கர்த்தருக்கு மனஸ்தாபமாயிருந்தது - 1சாமு.15:11
4. சவுல் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியால் அவனை அவரும் புறக்கணித்து தள்ளினார் - 1சாமு.15:26
5. சவுல் தாவீதை காய்மாரமாய்ப் பார்த்தான் - 1சாமு.18:7
6. சவுல் ஈசாயின் மகன் சாகவேண்டுமென்றான் - 1சாமு.20:30
7. தனது மகள் மீகாளை தாவீதுக்கு கொடுத்தான் - 1சாமு.18:20
8. தாவீது சவுலை கொல்ல மனதில்லாதிருந்தான் - 1சாமு.26:23
9. சவுலின் மரணம் மற்றும் அவன் ஆயுததாரி, அவன் மூன்று குமாரரின் மரணம் - 1சாமு.31:8
10. தாவீது சவுலின் எலும்புகளை அடக்கம் - 2சாமு.21:12

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் தகனம்பண்ணினார்களா?***

**விடை:** ஆம் - ".... பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்குக் கொண்டு வந்து, அவைகளை அங்கே தகனம்பண்ணி, அவர்களுடைய எலும்புகளை எடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே அடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம் பண்ணினார்கள்" (1சாமு.31:13)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

32



### பரிசுத்த வேதாகமத்தில் லாசரு
### Lazarus In The Holy Bible

1. இவன் ஒரு தரித்திரன், பருக்கள் நிறைந்தவன் - லூக்.16:20
2. நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று - லூக்.16:21
3. லாசரு மரித்தான் - லூக்.16:22
4. தேவதூதராலே ஆபிரகாம் மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் - லூக்.16:22
5. ஐசுவரியவான் பாதாளத்திலே வேதனைபட்டான் - லூக்.16:23
6. ஆபிரகாமிடம் லாசருவை அனுப்பகேட்டான் - லூக்.16:24
7. லாசரு தேற்றப்படுகிறான் - லூக்.16:25
8. லாசருவை தன் தகப்பன் வீட்டிற்கு அனுப்ப ஆபிரகாமை வேண்டிக்கொண்டான் - லூக்.16:28
9. மரித்தோரிலிருந்து ஒருவன் போனால் நம்புவார்கள் என்றான் - லூக்.16:30
10. ஆபிரகாமுடைய பதில் மரித்தோரிலிருந்து எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் - லூக்.16:31

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***ஐசுவரியவானும் தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்: அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் யார்?***

**விடை:** கர்த்தர் - "ஐசுவரியவானும் தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்" (நீதிமொழிகள் 22:2)





பெண்கள் பகுதி

## பெத்தானியில்... – At Bethany...

*-Glory Arjunan*

- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி

இரண்டாவதாக, மார்த்தாளைக் குறித்து தெரிந்து கொள்ளுவோம். உங்களில் மார்த்தாளைக் குறித்தும் அவளுடைய செயல்பாடுகள் குறித்தும அறிந்திருப்பீர்கள். மாத்தாள் எப்போதும் இயேசுவுக்குப் பணிவிடை செய்கிற ஒரு அருமையான ஸ்திரீ. "அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள், மார்த்தாள் பண்விடை செய்தாள். இயேசுவை கிறிஸ்து என்று அறிந்திருந்தாள். அவர் பெரியவர், அவரால் எல்லாம்கூடும் என்றும் இயேசு கிறிஸ்துவின் உபதேசம் குறித்தும் நன்கு அறிந்திருந்தாள். "இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்ட போது. அவருக்கு எதிர்கொண்டுபோனாள், மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்த ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்" (யோவா.11:20-22).

மேலும் "இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மாத்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார். அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்" (யோவா.11:23-27). இயேசுவை கிறிஸ்து, அதாவது மேசியா என்று விசுவாசித்தாள். ஆனபடியினால் அவருக்கு பணிவிடைசெய்தாள். அவளைக் குறித்து நாம், 'அவள் அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறவள்' என்று தான் அறிந்திருப்போம் ஆனால் இவ்வசனங்களில் அவள் இயேசுவை மேசியா என்று விசுவாசித்து அவரை சேவித்து மகிமைப்படுத்துவதைக் காணமுடிகிறது.

கிறிஸ்துவர்களாகிய நாம் இயேசுவை நம் கிரியைகளில், நம் வாழ்க்கையில் மகிமைப்படுத்துகிறோமா? அவருடைய மரணத்தை வாரந்தோறும் நினைவுகூருகிறோமா? ஆம், நாங்கள் வாரந்தோறும் ஞாயிறு ஆராதனைக்குச் செல்லுகிறோம் என்று சொல்லலாம் இடைவிடாமல் தேவனைத் தொழுது கொண்டு,

கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருவதும் மிக மிக முக்கியமானது இருந்தபோதிலும் மார்த்தாளைப் போல அநுதினமும் அவருக்கு சேவை செய்து மகிமைப்படுத்தக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒவ்வொரு நிமிடமும் கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து நன்றிகூறி அவருக்காக நம்மையே அர்ப்பணித்து மகிமைப்படுத்துவோமாக!

மூன்றாவதாக, லாசருவைக் குறித்து தியானிப்போம். மார்த்தாள் மற்றும் மரியாளின் சகோதரன் இவன். இயேசுவை அதிகமாய் நேசித்த குடும்பம் இது. இந்த லாசரு மரித்துப் போனான் அவன் மரித்து நான்கு நாள் கழித்து இயேசு அவ்விடம் வந்து, லாசருவின் மரித்த சரீரம் வைக்கப்பட்ட இடத்திற்குச் செல்லுகிறார். "இயேசு மாத்தாளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்" (யோவா.11:40). இயேசு லாசருவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த குகையினிடத்திற்குச் சென்று, அதின்மேல் வைக்கப்பட்டிருந்த கல்லை எடுத்துப்போடச் சொல்லி, பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழுத்துவிடுங்கள் என்றார்" (யோவா.11:38-44) என்ன அற்புதம் இது! மரித்தவர்களை உயிரோடெழுப்பக்கூடிய வல்லமை வேறு யாருக்கு உண்டு? இயேசுவால் மாத்திரமே இது கூடும் என்று எல்லாரும் அறியவேண்டுமென்று இதைச் செய்தார். மரித்து உயிரோடெழுப்பட்ட லாசரு இயேசுவைப் பின்பற்றுகிறவனாக எங்கும் காணப்பட்டான். வாழ்க்கையில் முக்கியமானது எது என்பதை அறிந்து கொண்டான். இயேசுவில் மாத்திரமே நித்தியஜீவன் உண்டு என்பதை அறிந்து கொண்டான். அவன் தன்னை உயிரோடு எழுப்பின இயேசுவோடு மிக நெருக்கமுள்ளவனாக அநேக நாட்கள் வாழ்ந்தான். பணத்திற்காகவோ, உலக இன்பத்திற்காகவோ உலக மேன்மைக்காகவோ அல்ல. "இயேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்" என்று அறிந்தவனாக அப்போஸ்தலர்களோடே கூட இணைந்து இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்திக் கொண்டு ஊழியஞ்செய்து வந்தான் என்று வரலாறு கூறுகிறது. லாசரு, ஆண்டவர் இயேசுவுக்கு முடிவுபரிந்தம் நன்றியுள்ளவனாயிருந்திருக்கிறான். அன்பு சகோதரியே, ஆவியில் மரித்தவர்களாக பாவத்திற்கு அடிமைகளாயிருந்த நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கி உயிர்ப்பித்திருக்கிற இயேசுவுக்கு நன்றியாக ஜீவிப்போமா? எல்லா இடங்களிலும் அவரை மகிமைப்படுத்துவோமா?

கடைசியாக, மரியாளைக் குறித்து தியானிப்போம்: இயேசுவுக்கு செலுத்தின கனம், மகிமையை இவளுடைய செயல்களில் காண முடிகிறது.


"அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலை மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" (யோவா.12:3). மத்தேயு 26:7 மற்றும் மாற்கு 14:3ல் அந்த தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள் என்று எழுதப்பட்டுள்ளது. இப்படியாக மரியாள் இயேசுவை விலையேறப்பெற்ற கலங்கமில்லாத தைலத்தால் அபிஷேகம் செய்தாள். இந்த தைலத்தின் மதிப்பு 300 டினாரி எனக் கூறப்பட்டுள்ளது. ஒரு நாள் சம்பளம் 1டினாரி என்று அறியும்போது கொஞ்சம் குறைய ஒரு வருட சம்பளத்தையும் இயேசுவுக்காக செலவழித்து விட்டாள் என்று தான் கூறவேண்டும். தன்னையே வெறுமையாக்கிவிட்டாள். அங்கே இருந்த யூதாஸ் காரியயோத்து இந்த வீண் செலவு என்னதிற்கு? இதை விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றான் (மத்.26:8; மாற்.14:5; யோவா.12:5) இவ்விதமாக எண்ணுகிறவர்களை இன்றும் காணமுடிகிறது. ஆம், முழுமனதோடு அன்பு கூராமலிருப்பவர்கள் பொதுவாக இவ்வாறு தான் நினைப்பார்கள் அல்லது கூறுவார்கள். இது விண் செலவு, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்பர். இவளோ, யார் சொல்வதையும் கேட்கவில்லை, இயேசுவை அதிகமாக நேசித்தபடியால் இந்த விலையுயர்ந்த தைலம் இவளுக்கு இயேசுவைக் காட்டிலும் மதிப்புமிகுந்ததாக இருக்கவில்லை. தன்னை அவருக்கென்று வெறுமையாக்கினாள்.

அது மத்திரமல்ல, தன் தலைமயிரினால் இயேசுவின் பாதங்களைத் துடைத்தாள் என்ற செயல், அவளது பெருமை மதிப்பு, மரியாதை எல்லாவற்றையும் தூக்கி எறியப்பண்ணினது. ஸ்திரீகளுக்கு தலைமயிர் மகிமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இயேசுவை மகிமைப்படுத்துவதே இவளது நோக்கமாயிருந்தது. ஆம், அன்பு சகோதரிகளே, கர்த்தரை மகிமைப்படுத்தும்படி நம்மையே செலவு செய்வோம். கர்த்தருடைய ஊழியம் பரம்பி மகிமைப்பட நம்மையும் நமக்குள்ளதையும் கொடுப்போம். இவ்விஷயத்தில் லோத்தின் மனைவியைப் போல உலகத்தைப் பார்க்க வேண்டாம். நாம் எதைச் செய்தாலும் பரலோகத்தில் நமக்கு மிகுந்த பொக்கிஷம் கிடைக்கும். அநேக ஸ்திரீகள் தங்களுடைய வறுமையிலிருந்தும் கர்த்தருக்காக செலவு செய்ததையும், காணிக்கையாகக் கொடுத்ததையும் வேதாகமத்தில் காண்கிறோம். நம்முடைய சொத்து, சுகம், கல்வி, பெருமை செல்வாக்கு இன்னும் பலவற்றைக் காட்டிலும் இயேசுவின் தியாகம் பெரிது, அவருடைய அன்புக்கு எதுவும் ஈடாகாது.

அன்பு சகோதரிகளே, மேற்கண்ட பெத்தானி கிராமத்திலிருந்த வேதாக பாத்திரங்களை நமக்கு மாதிரியாகக் கொண்டு இயேசுவை மகிமைப்படுத்துவோம் மரணபரியந்தம் நன்றியுடனிருந்து, மாய்மாலமற்ற கிறிஸ்தவ ஸ்திரீகளாக வாழ்வோம். கர்த்தர் தாமே நம் இருதயங்களை சீர் செய்வாராக! ஆமென்.

# மூப்பர்களுக்கான தகுதிகள்

**வரைகுறிப்பு**



1. சண்டை பண்ணாதவன் (சீக்கிரம் கோபம் கொள்ளாதவன்)
2. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்
3. சகல நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளையுடையவன்
4. நூதன சீஷனாயிராதவன்
5. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்
6. தேவனுடைய ஒரு உக்கிராணக்காரன்

**கலந்துரையாடல்**

**1. சண்டை பண்ணாதவன் (சீக்கிரம் கோபம் கொள்ளாதவன்).**

1 தீமோ.3:3 சொல்கிறது, ஒரு மூப்பனானவன் சண்டை பண்ணாதவனாய் இருக்க வேண்டும் என்று தீத்து 1:7 உரைக்கிறது. அவன் கோபமில்லாதவனாய் இருக்க வேண்டும் என்று. அவன் தன்னுடைய எரிச்சலை கட்டுப்படுத்துகிறான். அவன் கோபத்துடனே பேசுகிறதில்லை அல்லது கோபத்துடனே செயல்படுகிறதில்லை. அவன் சமாதானமாய் இருக்கிறவனும் சமாதானம் பண்ணுகிறவனுமாயிருக்கிறான். இயேசுவானவர் சமாதானம் பண்ணுகிறவர்களை ஆசீர்வதித்தார் (மத்.5:9) கிறிஸ்தவர்கள் சகல மனுஷரோடும் சமாதானமுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டும் (ரோமர் 12:18). அவர்களுக்கு இருக்கிற தேவஞானம் அவர்களுக்கு சாந்தகுணத்தையும், இரக்கத்தையும் அளிக்கிறது. அவர்கள் நீதியின் கனியை சமாதானத்திலே விதைக்கிறவர்கள். அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள் (யாக்.3:17,18) "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது, ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:31,32) என்று நமக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது.

"யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவீர்கள்" (யாக்.1:19) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சச்சரவை உண்டுபண்ணக்கூடிய ஒரு மனுஷன் சண்டை அல்லது மோதலை விரும்புகிறவனாயிருக்கிறான். அவன் ஒழுங்கின்மையையும், சண்டையையும் கொண்டு வருகிறதற்கு அறியப்பட்டவனாயிருக்கிறான். ஒரு மூப்பரானவர் சமாதானமுள்ளவராயிருப்பதற்கும் சாந்தகுணமுள்ளவராயிருப்பதற்கும் ஒரு முன்மாதிரியாய் இருக்கும்படி தெரிந்து கொள்ளப்படுகிறார். அவர் ஒரு சண்டை செய்கிறவராகவோ அல்லது விரைவில் கோபம் கொள்ளுகிறவராகவோ இருக்கிறதில்லை.

**2. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.**

ஒரு மூப்பனானவன் ஒரு நல்ல கணவனாகவும், ஒரு நல்ல தகப்பனாகவும் இருக்கிறான். அவனுடைய குடும்பம் தேவபக்தி உள்ளதாய் இருக்கும்படி அவனுடைய நற்குணாதிசயம் செல்வாக்கு உடையதாயிருக்கிறது. ஒரு மனுஷனுடைய குடும்பம் மற்ற எவன் ஒருவனைப் பார்க்கிலும் அவனை இன்னும் அதிகமாக கண்டும், அறிந்தும் இருக்கிறது. ஆகையால் அவர்கள் அவனுடைய குணாதிசயத்தை குறித்த காரியத்தில் ஒரு நல்ல அல்லது தீயவற்றிற்கு பரிந்துரைகளாக இருக்கிறார்கள். 1தீமோ.3:5, ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் அவன் தேவனுடைய சபையை விசாரிக்க முடியாது என்று குடும்பமும், சபையும் கிறிஸ்தவ விதிமுறைகளின்படி வழிநடத்தப்படுகிறது. ஒரு மனுஷனுடைய முன் உதாரணம் மற்றும் திறமை அவனுடைய குடும்பத்தினால் அறியப்படக் கூடியதாய் இருக்கிறது. ஒரு மனுஷன் தன்னுடைய குடும்பத்தில் நல்ல செல்வாக்கை உண்டாக்க இயலாமல் இருப்பானேயாகில், அவன் தன்னைக் குறித்து ஒரு மூப்பனாக தகுதியுள்ளவன் ஆகிறதற்கு இயலாதவனாக இருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறான். கொர்நேலியு தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான் (அப்.10:2).

சரியானதை செய்யும் விருப்பத்தில், அவனுடைய முன் மாதிரியை அவனுடைய குடும்பம் மதித்து அவனுடைய முன்மாதிரியைப் பின்பற்றியது. ஒரு மூப்பன் தன்னுடைய ஆலோசனையை மற்றவர்களுக்கு கூறத்தக்கதாக குடும்பத்தின் உபத்திரவங்களில், குடும்பத்தை நன்கு ஒழுங்குபடுத்துகிறவனாக இருக்க வேண்டும். ஆசாரியனாகிய ஏலி தன்னுடைய குமாரர்களை நன்கு ஒழுங்குபடுத்தாததினாலே தண்டிக்கப்பட்டான் (1சாமு.3 :13). ஆகையால் மனுஷர்கள் முதலாவது தேவனுடைய குடும்பமாக, சபையின் கண்காணியாக தகுதியடையும்படிக்கு தங்களுடைய சொந்த குடும்பங்களில் தங்களை நிரூபணம் செய்து கொள்ள வேண்டும்.

**3. சகல நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளையுடையவன்**

மேலே விவாதிக்கப்பட்ட அத்தியாவசியமான தேவையைத் தொடர்ந்து இது வருகிறது. ஒரு மூப்பனுடைய பிள்ளைகள் சகல நல்லொழுக்கம் உடையவர்களாகவும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் (1தீமோ.3:4) "அவர்கள் துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளாய் இருக்க வேண்டும்" (தீத்து 1:6) இதனால் ஒரு மூப்பனுடைய பிள்ளைகள் அவரை தகுதியடைய அல்லது தகுதியை இழக்க உதவி செய்கிறவர்களாய் இருக்க முடியும். பிதாக்களும் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்க்க வேண்டும் (எபே.6:4) ஒரு தகப்பனானவன் தன் சொந்த பிள்ளைகளுக்கு எப்படி போதிக்கிறான் என்பதன் மூலம் அவன் எவ்வளவு நல்ல முறையில் போதித்து மற்றவர்களை எப்படி ஒழுங்குபடுத்த முடியும் என்பதை வெளிப்படுத்துகிறான். அவன் கோபாக்கினையை கொண்டு வரும் படியாக கண்காணிக்க வேண்டாம், ஆனால் அவன் மிகுந்த அன்புடன் கவனமாக வளர்ச்சிக்கு உதவும் படியாக சிட்சிக்க வேண்டும் ஒரு தகப்பனாக பொறுப்பேற்று நடத்தும் நிலை ஒரு மூப்பனாக பொறுப்பேற்று நடத்தும் ஒரு மனுஷனுடைய நிலையை பரிசோதிக்கிறது. ஒரு மனுஷனுடைய பிள்ளைகள் கலகம் பண்ணுகிறவர்களாகவும், கட்டுப்பாடற்ற பிள்ளைகளாகவும் இருப்பார்களென்றால், அது அவர்களுடைய தகப்பன் கீழ்ப்படிந்திருத்தலை எவ்வாறு உருவாக்குவது என்பதை அறியாதவனாக இருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆகையால் அவன் ஒரு பிராந்திய சபையை கண்காணிக் கிறதற்குரிய தகுதியை அடையாமல் இருக்கிறான். ஒரு மூப்பர் தன்னுடைய பிள்ளைகள் சகல நல்லொழுக்கமும் கீழ்ப்படிதலும் உள்ள விசுவாசமுள்ள பிள்ளைகளாகயிருக்க வேண்டும்.

**4. நூதன சீஷனாயிராதவன்**

ஒரு மூப்பன் தொடக்க நிலையில் உள்ளவனாக இருக்கக்கூடாது. ஒரு நூதன சீஷன் என்பவன் அனுபவம் அற்றவனாகவும், முதிர்ச்சியின்மை காரணமாக திறமை இல்லாதவனாகவும் இருக்கிறான் "மூப்பன்" என்ற வார்த்தையே முதிர்ச்சியும் அனுபவமுடைய ஒருநபரைக் குறிப்பிடுகிறது. புதிதாக மனமாற்றம் அடைந்த ஒரு அங்கத்தினன் மூப்பனாக இருக்க முடியாது. ஒரு நூதன சீஷன் பெருமையுடனே தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளுகிற அபாயத்திலும் பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழுந்து போகிறவனாகவும் இருக்கிறான். (1தீமோ.3:6). அவன் இன்னும் பொறுப்பேற்று நடத்தும் நிலைக்கு ஆயத்தமாகாதவனாகவும் இருக்கிறான். முதிர்ச்சியடைவதற்கு தேவையானவனாக இருக்கிறான். முதிர்ச்சியடைவதற்கு தேவையான வருஷங்களின் எண்ணிக்கையை வேதாகமம் சொல்லுகிறதில்லை, ஆனால் அது முதிர்ச்சிக்கான குணாதிசங்களை நமக்கு சொல்கிறது. ஒரு மனுஷன் இந்த விசேஷமான குணாதிசயங்களில் ஒருவேளை ஒருசில வருஷங்களில் விருத்தியடைலாம், அதேசமயம் மற்றொருவருக்கு பல வருஷங்கள் ஆகலாம். ஒரு வாலிபனாயிருக்கிறவனுக்கு ஞானத்தை அளிக்க வயதும், அனுபவமும் தேவையாய் இருக்கிறது. ஒரு மூப்பனாக இருக்கிறவன் ஒரு நூதன சீஷனாகவோ அல்லது தொடக்க நிலையில் உள்ளவனாகவோ இருக்கிறதில்லை.

**5. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்**

ஒரு மூப்பனானவன் அங்கத்தினரல்லாதவர்களிடமிருந்து ஒரு நற்பெயர் பெற்றவராக இருக்க வேண்டும் (1தீமோ.3:7) அவனுடைய செல்வாக்கு அல்லது

பொதுமதிப்பீடு புறம்பானவர்களுடைய நிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவனுடைய நல்ல குணாதிசயத்தை அவனுடன் பணியாற்றுகிற ஜனங்கள், சிநேகிதர்கள் மற்றும் அறிமுகம் ஆனவர்கள் மதிப்பார்கள். இருளில் இருக்கிறவர்களுக்கு அவன் ஒரு வெளிச்சமாக இருப்பான் (மத்.5:14). மனுஷர் அவனுடைய நற்கிரியைகளைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தும்படி அவனுடைய வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்க கடவது (மத்.5:16) விசுவாசியாய் இராதவர்களும் அவனுடைய நல்ல ஜீவியத்தை கண்டு அவனை கனம் பண்ணுவார்கள். எப்பொழுதுமே கிறிஸ்தவரல்லாதவர்கள் நம்மை குற்றஞ்சாட்டும் படியாக கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு பதிலாக ஒரு மெய்யான கிறிஸ்தவனுடைய ஜீவியத்திற்கு மதிப்பளிக்கிற பொழுது, அது கிறிஸ்தவனுக்காக நன்மையானதை பேசுகிறது. அப்படிப்பட்ட ஒரு மனுஷனே ஒரு மூப்பனாக இருக்கக்கடவன். அவன் எங்கே ஜீவிக்கிறானோ அந்த சமுதாயத்திலே அவனுடைய நல்ல ஜீவியத்திற்காக அவன் அறியப்பட்டவனாக இருப்பான். இதுவே புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன் என்பதன் பொருளாக இருக்கிறது.

**6. தேவனுடைய ஒரு உக்கிராணக்காரன்**

ஒரு மூப்பனாக இருக்கிறவன் குற்றஞ்சாட்டப்படாத தேவனுடைய உக்கிராணக்காரனாக இருக்க வேண்டும் என்று தீத்து1:7 சொல்கிறது. ஒரு உக்கிராணக்காரன் என்பவன் தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட மதிப்பானவகளை குறித்து திறமை மற்றும கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவன். விலையேறப்பெற்ற உடைமைகளுக்கு காப்பாளராக இருக்கிறவன். தன் எஜமானுடைய உடைமைகளை கவனமாய் காக்கிறதற்கு பொறுப்புடையவராக இருக்கிறான். இதற்கு எப்பொழுதும் உண்மை உள்ளவனாயிருக்கிற ஒரு உக்கிராணக்காரன் தேவையாயிருக்கிறான் (1கொரி.4:2) ஒரு மூப்பனுடைய பொறுப்பில் மதிப்புள்ளவைகளாக விடப்படுகிறவைகள் உறுப்பினர்களுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் (எபி.13:17) அவர்களைக் குறித்து அவன் கணக்கு ஒப்புவிக்க தாங்கிக் கொள்ளக் கூடியவனாக இருக்கிறான். சோர்வடையும் தருணங்களில் அவன் எளிதாக அதை விட்டு விடுகிறதில்லை. அவன் சரியானவனாகவும் உறுதியாய் தரித்திருக்கிறவனாகவும் இருக்கிறான். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும் பொறுமையானது கூட்டி வழங்கப்பட வேண்டும் (2பேதுரு 1:6). விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குகிறது. (யாக்.1:3).

இன்னல்கள் வரும்பொழுது அதை தாங்கிக் கொள்வோமேயாகில் அது தேவனிடத்தில் நம்பிக்கையை கொண்டு வருகிறது. மூப்பன் ஒருவருடைய பொறுமையின் காரணமாக அவன் மற்றவர்களுடைய உபத்திரவங்களிலே அவர்களை உற்சாகப்படுத்தும் திறமையுள்ளவனாகிறான். சபை அங்கத்தினர்கள் சோதனையின் மத்தியில் ஆலோசனைக் காக அடிக்கடி அவரை சார்ந்திருக்கிற படியால் சாந்தகுணமுள்ளவனாகவும், பகுத்தறியக் கூடியவனாகவும் இருக்கிறான். சபையின் கலந்துரையாடல்கள், சச்சரவுகளாக மாறாத படிக்கு காத்துக் கொள்வதில் அவன் உதவியாக இருக்கிறான். அவன் பிராந்திய சபையை நிலையானதாகவும், நன்கு தீர்வு செய்யப்பட்டதாகவும் செய்கிறான். பொறுமை மிகவும் மேம்பட்ட விசேஷமான குணமாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அத்தியாவசியமாக இருக்கிறது. மூப்பர்கள் பொறுமையில் முன்மாதிரிகள் ஆக இருக்கிறார்கள்.

**கேள்விகள்**

1. உபசரித்தல் என்பதற்கு ஒரு சிறிய பொருள் கொடுக்கவும் _________
2. இது ____காகவும் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் விசேஷமாக யாருக்காக?
3. "போதக சமர்த்தன்" என்பதற்கு ஒரு சிறிய அர்த்தம் கொடுக்கவும் _______
4. "போதகத்திற்கான 7 வசனங்களை வரிசைப்படுத்தவும்
5. திராட்ச ரசத்தின் 2 முறையான பயன்படுத்தல்களை சொல்லவும் ____
6. "அடிக்கிறவன்" என்றால் என்ன? __________
7. அடித்தலுக்கு 2 சரியான முன் உதாரணங்களை குறிப்பிடவும் ________
8. இழிவான ஆதாயம் என்பது என்ன? ______________________
9. "பொருளாசை"யை குறிப்பிடும் 7வேத வசனங்களை சொல்லவும்
10. "பொறுமை" என்பது என்ன?

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

## நான் யார்? – Who Am I?



- என் நாட்களில் இயேசு பெத்லகேமில் பிறந்தார்
- இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டன
- யோவானை சிரச்சேதம் பண்ணுவித்தேன்
- இயேசுவை பார்க்கவிரும்பினேன்
- நான் இயேசுவினிடத்தில் குற்றங்காணவில்லை
- நான் இயேசுவை நிந்தித்து பரியாசம்பண்ணினேன்
- இயேசு என்னை நரி என்றார்

## ஜெபியுங்கள்



- புதுவருட ஊழியங்களுக்காக...
- புதுவருட ஸ்தோத்திர கூட்டத்திற்காக...
- புதுவருடத்தில் புதிய வசல் திறக்கப்பட...
- புதிய பெலனை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள...
- புதிய வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ள...
- புதிய மார்க்கத்தை குறித்து எடுத்துரைக்க...
- புதிய மனிதனாக வாழ...

**"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" – 1தெசலோனிக்கேயர் 5:17**



# மனந்திரும்பு
# Repent



*எலியா ஜனங்ளை மனந்திரும்பச் சொன்னான்*
*ஏசாயா ஜனங்ளை மனந்திரும்பச் சொன்னான்*
*யோவேல் ஜனங்ளை மனந்திரும்பச் சொன்னான்*
*யோனா ஜனங்ளை மனந்திரும்பச் சொன்னான்*

*ஏரேமியா, மீகா, ஆமோஸ், மல்கியா அனைவரும் மனந்திரும்புதல் பற்றிய செய்தியைக் கொண்டிருந்தனர்*

*கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்த யோவான் ஸ்நானனும் மனந்திரும்புங்கள் என்று சொன்னான்*
*இயேசு மனந்திரும்பச் சொன்னார் சீஷர்கள் மனந்திரும்பச் சொன்னார்கள்*

*2 0 2 3 விலும் இச்செய்தி மாற்றமடைய வில்லை*

"அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச்சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது"
லூக்கா 24:47

## நடப்புச் செய்திகள்

✦ குஜராத்தில் தெருநாய்கள் தாக்கியதில் இருந்து தப்ப முயன்று கீழே விழுந்த தொழிலதிபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

✦ சர்வதேசப் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான கட்டத்தில் உள்ளதாக உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

✦ 2030ல் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 2வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பூமியிலிருந்து அகற்றவேண்டும்

சிறுவர் பகுதி

வேத பகுதி: அப்போஸ்தலர்22:17-22



**அ**ப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவன்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள். சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சொந்த ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைக் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்துபயன்படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். பவுல் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறான். அவன் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றான். இந்தப்பவுலைப்போல எதிர்காலத்தில் நீங்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்வீர்களா?

மனப்பாட வசனம்

**மனப்பாட வசனம்**

**"தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா4:24)**


## வேத அறிவுப் போட்டி எண்: 280

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. மேய்ப்பனை வெட்டு, அப்பொழுது ஆடுகள் என்னவாகும்?
2. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு தம்முடைய சீஷருக்கு அருளின மூன்றாவது தரிசனத்தில் அவர்களுக்கு எதையும், எதையும் கொடுத்தார்?
3. என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் யாராயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்?
4. தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்ற சத்தம் யாருக்கு மூன்றாந்தரமும் உண்டானது?
5. நாங்கள் எல்லாரும் ஒரு தகப்பனுடைய பிள்ளைகள்; நாங்கள் நிஜஸ்தர் உமது அடியார் வேவுகாரர் அல்ல என்று யாரைப் பார்த்து சொன்னார்கள்?
6. எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டுமா?
7. கர்த்தர் சீனாய்மலையில் எந்தநாளில் மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்?
8. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற எவருடைய ஆலயமாயிருக்கிறது?
9. யாதொரு அந்நியன் உங்கள் தேசத்தில் உங்களோடே தங்கினால், அவனை என்ன செய்யவேண்டாம்?
10. நாங்கள் பைத்தியங்கொண்டவர்கள் என்றால் யாருக்காக அப்படியிருக்கும்?

## வேதாகம ஆய்வு... 64 சீமோன் – Simon



1. சீமோன், இவனுக்கு பேதுரு என்று பெயரிட்டார் – மாற்.3:16
2. இவன் சகோதரன் அந்திரேயா – லூக்.6:14
3. அப்போஸ்தலர்களில் ஒருவன் – மத்.10:2
4. இவனுடைய பிரசங்கத்தை கேட்டு 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள் – அப்.2:41
5. புதிய ஏற்பாட்டில் இரண்டு நிருபங்கள் இவனால் எழுதப்பட்டது

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

December 2023



வேர்ல்டு இவான்சலிசம் வேதாகமபள்ளி நிர்வாகி, ஆசிரியர் மற்றும் மாணவர்கள் 2023



வேர்ல்டு இவான்சலிசம் வேதாகமபள்ளி சிறப்புக் கூட்டம் சென்னை

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



இயேசுகிறிஸ்து ஒலிவமலைக்கு ஜெபிக்கும்படியாக செல்லும்போது இருந்த ஆலிவ் மரம் இன்றும் அங்கு இருக்கிறது

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

